**BEFORE THE HON'BLE NATIONAL GREEN TRIBUNAL**

**SOUTHERN ZONE BENCH AT CHENNAI**

**(Under S.14 r/w. S. 18 (1) of the National Green Tribunal Act, 2010)**

**O.A. NO. 69 OF 2023 (SZ)**

R.D. Raghu ...Applicant

-Vs-

The District Collector & 2 Others ...Respondents

**INDEX TO THE ADDITIONAL TYPED SET OF PAPERS**


| S.No. | Date | Description of Documents | Annexure | Pg No. |
|---|---|---|---|---|
| 1. | 16.05.2023 | Newspaper Report | I | 1 |
| 2. | 25.05.2023 | Letter bearing Na.Ka. 557/2022/C1 issued by the 3rd respondent | II | 4 |
| 3. | 30.06.2023 | Photographs | III | 5 |
| 4. | 03.07.2023 | Letter bearing Ko 19/No(Ki/2023) issued by Water Resource Department | IV | 11 |


It is certified that all the documents contained in the above typed set of papers are true copies.

**Dated at Chennai, the 04th Day of July, 2023**

**COUNSEL FOR APPLICANT**

ANNEXURE - 1 1

தினமலர்
கோவை
www.dinamalar.com
கோயம்புத்தூர்
• செவ்வாய் • மே 16 2023

## அம்ரித் பாரத் திட்டத்தில் வடகோவை போத்தனுார் ஸ்டேஷன் தேர்வு

**கோவை, மே 16 –**
மத்திய அரசின் ரயில்வே துறை, அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் ரயில்வே ஸ்டேஷன்களை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு செய்... ளது. இங்கு 'லிப்ட்', 'எஸ்கலேட்டர்', நடைபாதை மேம்பாலம், கார் மற்றும் டூவிலர் பார்கிங் பகுதிகளில் மேற்கூரை, ஸ்டேஷன்களில் முகப்பு மாற்றம், வெளிப்...

## அரசு பொருட்காட்சியில் விதிமீறல்; ர...



**கோவை, மே 16–**
கோவை அரசு பொருட்காட்சியில், ஒப்பந்த வரைபடத்துக்கு மாறாக, பொது மக்களுக்கு ஒதுக்கிய இடங்களில், கூடுதலாக ராட்டினங்கள் அமைக்கப்...

# நொய்யல் ஆற்றங்கரையில் குப்பை கிடங்கு

## திட்டத்தை கைவிட பொதுமக்கள் முறையீடு

**கோவை, மே 16–**
பொதுமக்களிடம் குறை கேட்கும் கூட்டம், கோவை கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது; மனுக்களை பெற்ற கலெக்டர் கிராந்திகுமார், துறை ரீதியான நடவடிக்கைக்கு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பரிந்துரைத்தார்.

மனுக்களைபதிவுசெய்து ஒப்புகைச்சீட்டு வழங்கும் இடத்தில் பொதுமக்கள் வசதிக்காக, இருக்கை வசதி செய்யப்பட்டிருந்தது. பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார், நடைபாதையின் குறுக்கே சேர்களால் தடுப்பு ஏற்படுத்தி, பொதுமக்களை தடுத்து, நீண்ட வரிசையில் நிற்க வைத்து, அனுப்பினர். இதன்பின், மனு கொடுக்கும் இடத்தில் மீண்டும் வரிசையில் காத்திருந்து, கலெக்டரிடம் வழங்கினர்.



■ கோவை சோமனுாரில் நொய்யல் ஆற்றின் கரையில் குப்பை கிடங்கு கட்டுவதை கண்டித்து அப்பகுதி மக்கள் கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுக்க வந்தனர்.

### ஆற்றங்கரையில் குப்பை கிடங்கு

சோமனுாரை சேர்ந்த ஊர் பொதுமக்கள் கொடுத்த மனுவில், 'கருமத்தம்பட்டி நகராட்சி, ஆத்துப்பாளையம், சாமளாபுரம் நொய்யல் ஆற்றை சுற்றி, விவசாயம் செய்யப்படுகிறது; ஏராளமான குடியிருப்புகள் உள்ளன. விதிமுறையை மீறி, ஆற்றங்கரையில் குப்பை கிடங்கு அமைப்பதற்கான முயற்சி நடந்து வருகிறது. குப்பைகள் ஆற்றில் கலந்து தண்ணீர் மாசுபடும். விவசாயிகள் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். இப்பணியை மாவட்ட நிர்வாகம் தடுத்து நிறுத்த வேண்டும். சுற்றுச்சூழல் பாதிக்கும் என்பதால், திட்டத்தை கைவிட, கருமத்தம்பட்டி நகராட்சிக்கு அறிவுறுத்த வேண்டும்' என கூறியுள்ளனர்.

### கால்வாய் துார்வாரணும்

ஆம் ஆத்மி கட்சி சார்பில் கொடுத்த மனுவில், 'கோவை ரேஸ்கோர்ஸ் அரசு அலுவலர் குடியிருப்பு அருகில் உள்ள ரோட்டில் சாக்கடை கால்வாயில் அடைப்பு ஏற்பட்டுள்ளது; கழிவு நீர் ரோட்டில் வழிந்தோடுகிறது. குடிநீரோடு கழிவு நீர் கலக்கிறது. அதனால், சாக்கடை கால்வாயை விரைந்து துார்வார வேண்டும்' என, தெரிவிக்கப்பட்டு உள்ளது.

### முதியவர் போராட்டம்

கோவை எஸ்.எஸ். குளத்தை சேர்ந்த ராஜேந்திரன், 63 என்பவர், கலெக்டர் அலுவலகத்தில் திடீரென தரையில் அமர்ந்து, தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார். அவரை போலீசார் சமாதானம் செய்தனர். அவர் கூறுகையில், 'தனக்கு சொந்தமான, 1.5 ஏக்கர் நிலத்தை தனியார் நிறுவனம் அபகரித்து விட்டது. அந்நிலத்தை மீட்டுத்தரக்கோரி, ஏற்கனவே மனு கொடுத்திருந்தேன். இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. முதல்வர் ஸ்டாலின், 100 நாட்களில் குறைகளை தீர்ப்பேன் என கூறினார்; மனு கொடுத்தேன். இன்னும் நிலத்தை மீட்டுத்தரவில்லை. அதனால், மீண்டும் மனு கொடுக்க வந்திருக்கிறேன். எனக்கு கொலை மிரட்டல் விடுக்கின்றனர்,'' என்றார்.

## 30 முதுகலை...

**கோவை, மே 16–**
கோவையில், 30 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருப்பதால், அடுத்த கல்வியாண்டுக்கு, கற்பித்தல் பணிகளில் பாதிப்பு ஏற்படாமல் இருக்க, ஆவண செய்ய வேண்டுமென்ற, கோரிக்கை வலுத்துள்ளது.

கோவை மாவட்டத்தில், 91 அரசு மேல்நிலைப்பள்ளிகள் உள்ளன. இங்கு, பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்பு கையாளும் முதுகலை ஆசிரியர்களில், 30 பேர் தற்போது பணி ஓய்வு பெற்றனர்.

இவர்களில் பெரும்பாலானோர், இரு ஆண்டுகளுக்கு...

ஜ...
மு... பட... த... டெ... கர்... கா... எ... கர்...
டி... க... இ... நட... வி...
டே... மு... ரிய... லு... க... நட... கா...

**முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி**




## கருமத்தம்பட்டி அருகே கஞ்சா விற்ற வாலிபர் கைது



**கருமத்தம்பட்டி, மே 16–**
கருமத்தம்பட்டி அருகே கஞ்சா விற்ற நபரை போலீசார் கைது செய்தனர்.

கணியூர் தனியார் கல்...



## கோவையில் இன்று...




வானம் மேக மூட்டமாக காணப்படும். மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. காற்றில் 54 சதவீதம் ஈரப்பதம் இருக்கும். மணிக்கு 18 கி.மீ. வேகத்தில் காற்று வீசும். அதிகபட்ச வெப்பநிலை 98.6 டிகிரியாக (37 செல்சியஸ்) இருக்கும்.




கோனியம்மன் கோவிலில் சிறப்பு பூஜை, நேரம்: காலை 6.30 மணி, இடம்: டவுன்ஹால்.

வீதி.

முந்தி விநாயகர் கோவிலில் பூஜை, நேரம்: காலை 7 மணி, இடம்: புலியகுளம்.

ஞானமூர்த்திஸ்வரர் சமேத முத்தாரம்மன் கோவிலில் சிறப்பு பூஜை, நேரம்: காலை 8 மணி, இடம்: நல்லாம்பாளையம்.

அய்யா வைகுண்ட சிவபதியில் திருஏடு வாசிப்பு, நேரம்: மாலை 6.30 மணி, இடம்: வரதய்யங்கார்பாளையம்.

மாரியம்மன் கோவிலில் மறு பூஜை அபிஷேகம், நேரம்: இரவு 7 மணி, இடம்: சிங்காநல்லூர்.

மகா மாரியம்மன் கோவிலில் திருக்கல்யாணம், நேரம்: இரவு

தமிழக இளைஞர்கள் மத்திய அரசின் போட்டித்தேர்வுகளை எளிதாக அணுக பயிற்சி அளிக்கும் நோக்கத்தில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் போட்டித்தேர்வு தொடங்கப்பட்டு உள்ளது. மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் (எஸ்.எஸ்.சி.) ரெயில்வே தேர்வு, வங்கி பணியாளர் தேர்வு உள்ளிட்ட தேர்வுகளை எளிதாக எழுத பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

அதன்படி கோவையில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வருகிற 25-ந் தேதி முதல் தொடங்கப்பட உள்ளது. இதன் மூலம் மாவட்டத்துக்கு தலா 150 மாணவர்கள் வீதம் தேர்வு செய்யப்பட்டு சிறந்த வல்லுநர்களை கொண்டு பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி காலம் 100 நாட்கள் ஆகும். இந்த பயிற்சி பெற வருகிற 20-ந் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்று கோவை மாவட்ட கலெக்டர் கிராந்திகுமார் தெரிவித்து உள்ளார்.

### பீளமேட்டில் துணிகரம்:

## வீட்டு பூட்டை உடைத்து ரூ.4¼ லட்சம் நகை, பணம் கொள்ளை

பீளமேடு, மே.16-

கோவை பீளமேட்டில் வீட்டின் பூட்டை உடைத்து ரூ.4¼ லட்சம் நகை, பணம் திருடிய மர்ம நபர்களை போலீசார் தேடி வருகின்றனர்.

**சுய தொழில்**

கோவை தண்ணீர் பந்தல் பகுதி ஓம் முருகா தெருவை சேர்ந்தவர் குணசேகரன் (வயது 46). சுய தொழில் செய்து வருகிறார். இவர் கடந்த 9-ந் தேதி வீட்டை பூட்டி விட்டு தனது குடும்பத்தினருடன் செங்கதுறையில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்றார். அங்கு சில நாட்கள் அவர் தங்கியிருந்தார்.

இதன் பின்னர் அவர் தனது குடும்பத்தினருடன் அங்கிருந்து நேற்றுமுன்தினம் வீட்டுக்கு திரும்பினர். அப்போது வீட்டின் முன்பக்க கதவின் பூட்டு உடைக்கப்பட்டு கிடந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் வீட்டின் உள்ளே சென்று பார்த்தார். அங்கு பீரோ திறக்கப்பட்டு, அதில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆடைகள் சிதறி கிடந்தன.

**திருட்டு**

மேலும் வீட்டு அலமாரியில் இருந்த 10 பவுன் நகை மற்றும் ரூ.30 ஆயிரம் பணம் திருட்டு போயிருப்பது கண்டு குணசேகரன் அதிர்ச்சியடைந்தார். வீட்டில் 2 நாட்களாக ஆட்கள் இல்லாததை நோட்டமிட்ட மர்ம நபர்கள் இந்த திருட்டில் ஈடுபட்டு தப்பியுள்ளனர். திருடு போன நகை மற்றும் பணத்தின் மதிப்பு ரூ.4¼ லட்சம் ஆகும்.

இது குறித்து குணசேகரன் பீளமேடு போலீசில் புகார் அளித்தார். புகாரின் பேரில், போலீசார் மற்றும் கைரேகை நிபுணர்கள் சம்பவ இடத்துக்கு சென்று சோதனை செய்தனர். அங்கு பதிவாகியிருந்த 2 கைரேகைகளை கைப்பற்றி ஆய்வு செய்து வருகின்றனர். இந்த திருட்டு சம்பவம் தொடர்பாக பீளமேடு போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



கோவை மாநகராட்சி கவுன்சிலர்கள் கூட்டத்தில் அ.தி.மு.க. கவுன்சிலர் பிரபாகரன் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க. பெண் கவுன்சிலர் அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட காட்சி.

### மேயரை பதவி விலக வற்புறுத்திய அ.தி.மு.க. கவுன்சிலர்:

## கோவை மாநகராட்சி கூட்டத்தில் திடீர் சலசலப்பு

நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஜூன் மாதத்தில் தீர்வு**

கூட்டத்தில் பேசிய பல கவுன்சிலர்களும் குடிநீர் வினியோகம் செய்ய 12 நாட்களுக்கு மேல் ஆவதாக குற்றம் சாட்டினார்கள். இதற்கு பதில் அளித்து ஆணையாளர் பிரதாப் கூறும்போது, சிறுவாணியில் கேரளா தடுப்பு அணை கட்டுவது குறித்து தமிழக அரசு சார்பில் கேரளாவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்ட நடவடிக்கை எடுக்கவும் ஆலோசனை நடத்தப்படுகிறது. தற்போது சிறுவாணியில் 6.14 அடி நீர்மட்டம் உள்ளது. இன்னும் ஒரு வாரத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கிவிடும். பில்லூர் 3-வது குடிநீர் திட்டப்பணிகளும் ஜூன் மாதம் முடி

சாலை பணியை விரைந்து முடிக்க வலியுறுத்தி மனு கொடுக்க வந்த வியாபாரிகளை படத்தில் காணலாம்.

## நொய்யல் ஆற்றின் ஓரத்தில் குப்பை கிடங்கு அமைக்கக்கூடாது

### கலெக்டரிடம் விவசாயிகள் மனு

கோவை, மே.16-

சோமனூர் அருகே நொய்யல் ஆற்றின் ஓரத்தில் குப்பைக்கிடங்கு அமைக்கக்கூடாது என்று விவசாயிகள் கலெக்டரிடம் மனு அளித்தனர்.

**குறைதீர்க்கும் கூட்டம்**

கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. இதில் கலெக்டர் கிராந்திகுமார் தலைமை தாங்கி பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்றார். இதில் சோமனூர் பகுதியை சேர்ந்த விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கொடுத்த மனுவில் கூறிஇருப்பதாவது:- சோமனூர் வழியாக செல்லும் நொய்யல் ஆற்றின் மூலம் ஏராளமான விவசாய நிலங்கள் பாசனம் பெற்று வருகின்றன. இந்த ஆற்றின் ஓரத்தில் குப்பை கிடங்கு அமைக்க அனைத்து ஏற்பாடுகளும் நடந்து வருகிறது. இங்கு குப்பைக்கிடங்கு அமைக்கும்போது நீர்நிலை மாசு ஏற்படுவதுடன், விவசாய கிணறுகளில் இருக்கும் தண்ணீரும் மாசு ஏற்படும். எனவே எக்காரணத்தைக்கொண்டும் நொய்யல் ஆற்றின் ஓரத்தில் குப்பைக்கிடங்கு அமைக்க அனுமதிக்கக்கூடாது. தற்போது ராமச்சிபாளையம், எலச்சிபாளையம் ஆகிய பகுதிகளில் குப்பைகள் கொட்டப்பட்டு வருகிறது. எனவே மீண்டும் அந்த பகுதியிலேயே குப்பைகளை கொட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறப்பட்டு இருந்தது.

**சாலை அமைக்கும் பணி தாமதம்**

கோவை குறிச்சிப்பிரிவு வியாபாரிகள் நலச்சங்க தலைவர் கிதர் முகமது தலைமையில் நிர்வாகிகள் ராமமோகன், இலியாஸ், காதர் மற்றும் பல நிர்வாகிகள் வந்து கொடுத்த மனுவில், போத்தனூர் சாலை பொதுமக்களின் பயன்பாட்டுக்கு முக்கியமான சாலை ஆகும். இதனால் இந்த வழியாக தினமும் ஏராளமான வாகனங்கள் சென்று வருகின்றன. இங்கு பாதாள சாக்கடை அமைக்கப்பட்டு உள்ளதால் தற்போது சாலை விரிவாக்கம் செய்யும் பணி நடந்து வருகிறது.

இந்த பணிகள் அனைத்துமே தாமதமாகதான் நடக்கிறது. அத்துடன் ஆங்காங்கே சாலையின் நடுவே மின்கம்பங்களும் இருக்கிறது. இதனால் இந்த சாலையில் அடிக்கடி விபத்து ஏற்பட்டு வருகிறது. இதன் காரணமாக இந்த வழியாக செல்லும் வாகன ஓட்டிகள் பெரிதும் அவதியடைந்து வருகிறார்கள். எனவே அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுத்து இந்த சாலை அமைக்கும் பணியை விரைவுபடுத்தி முடிக்க வேண்டும் என கூறப்பட்டு இருந்தது.

**மண்டியிட்டு மனு**

இந்துஸ்தான் மக்கள் சேவா சங்க நிறுவன தலைவர் லோட்டர் மணிகண்டன் தலைமையில் நிர்வாகிகள் மண்டியிட்டபடி கலெக்டர் அலுவலகம் வந்தனர். பின்னர் அவர்கள் கொடுத்த மனுவில், சமீபத்தில் வெளியிடப்பட்ட தி கேரளா ஸ்டோரி என்ற படம் நடுநிலையாக இருப்பதால் அனைவரும் கட்டாயம் பார்க்க வேண்டிய படமாக இருக்கிறது.

ஆனால் இந்த படம் கோவை உள்பட தமிழகத்தின் பல்வேறு பகுதியில் திரையிடாமல் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. எனவே இந்த படத்தை திரையிடுவதற்கும், பொதுமக்கள் இந்த படத்தை பார்க்கவும் தக்க பாதுகாப்பு வழங்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டு இருந்தது.

**பிரசவம் பார்க்கவில்லை**

கோவை கணபதியை சேர்ந்த அஞ்சலாதேவி என்ற பெண் கொடுத்த மனுவில், எனது மருமகள் பிரசவத்துக்காக கடந்த 28-ந் தேதி பிறந்தது. எனவே எனது மருமகளுக்கு பிரசவம் பார்க்காமல் அலைக்கழித்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறப்பட்டு இருந்தது.

**வீடுகள் ஒதுக்கவில்லை**

கோவை உக்கடம் புல்லுக்காடு பகுதியை சேர்ந்த பொதுமக்கள் கொடுத்த மனுவில், நாங்கள் இந்த பகுதியில் கடந்த 5 ஆண்டுகளாக வசித்து வருகிறோம். ஸ்மார்ட் சிட்டி பணிகள் செய்வதாக கூறி எங்கள் வீடுகளை காலி செய்யக்கோரி அதிகாரிகள் வற்புறுத்தி வருகிறார்கள். குடிசை மாற்றுவாரியத்தில் வீடுக்காக நாங்கள் பணம் கட்டியும் இன்னும் வீடுகள் ஒதுக்கீடு செய்யவில்லை. மேலும் நாங்கள் குடியிருந்து வரும் பகுதியில் பராமரிப்பு பணிகள் நடைபெறவே இல்லை. சாக்கடை கழிவுநீர் தேங்கி நிற்பதால் நோய் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. எனவே எங்களுக்கு விரைவில் வீடுகள் ஒதுக்கி கொடுப்பதுடன், அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என கூறப்பட்டு இருந்தது.

## தர்ணா போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயி

கோவை கலெக்டர் அலுவலகத்தில் நேற்று மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில் மனு கொடுப்பதற்காக கோவை அருகே உள்ள கோவில்பாளையத்தை சேர்ந்த விவசாயி ராஜேந்திரன் (வயது 60) என்பவர் வந்தார். பின்னர் அவர் திடீரென்று கலெக்டர் அலுவலக வளாகத்தில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.



உடனே அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட போலீசார் அங்கு சென்று அவரிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அதற்கு அவர் கொண்டையம்பாளையம் பகுதியில் எனக்கு சொந்தமான 1½ ஏக்கர் நிலத்தை ஆக்கிரமித்து என்னை மோசடி செய்துவிட்டனர். எனவே உரிய நடவடிக்கை எடுத்து எனது நிலத்தை மீட்டு தர வேண்டும் என்று கூறினார். இது தொடர்பாக உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்று போலீசார் உறுதியளித்தனர். இதையடுத்து அவர் போராட்டத்தை கைவிட்டு அங்கிருந்து சென்றார்.

விசாரணை நடத்தி வருகின்றனர்.

**தனியார் நிறுவனம்**

ஈரோடு மாவட்டம் கே.என்.கே. ரோடு பகுதியை சேர்ந்தவர் வள்ளியப்பன் (வயது 63). இவர் கோவை காந்திபுரம் பகுதியில் ஆட்டோமொபைல் ஏஜென்சி நடத்தி வருகிறார். இங்கு சமீபத்தில் கணக்குதணிக்கை நடைபெற்றது. இதில் ரூ.20 லட்சத்திற்கு பண மோசடி நடைபெற்றது தெரியவந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த வள்ளியப்பன் ரத்தினபுரி போலீசில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி

ரியை சேர்ந்த சாந்து முகமது (42) என்பவர் மோசடியில் ஈடுபட்டது தெரியவந்தது. இவர் கடந்த சில ஆண்டுகளாக வாடிக்கையாளர்களிடம் இருந்து வசூல் செய்யும் தொகையை ஏஜென்சிகணக்கில் வரவு வைக்காமல் ரூ.20 லட்சம் வரை மோசடி செய்தது விசாரணையில் தெரியவந்தது. இதனைத்தொடர்ந்து கடந்த சில நாட்களாக தலைமறைவாக இருந்த சாந்து முகமதுவை ரத்தினபுரி போலீசார் பிடித்து கைதுசெய்தனர். தொடர்ந்து அவரிடம் இந்த மோசடிக்கு வேறு யாரும் உடந்தையா? மோசடி செய்த பணத்தை எங்கு வைத்து உள்ளார் என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### ஆர்.எஸ்.புரத்தில்

## போதை மாத்திரை விற்ற வாலிபர் கைது

கோவை, மே.16-

கோவை ஆர்.எஸ்.புரம் போலீசார் அங்குள்ள உழவர் சந்தை பகுதியில் ரோந்து பணி மேற்கொண்டனர். அப்போது அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் நின்று கொண்டிருந்த வாலிபரை பிடித்து விசாரணை நடத்தினர். அப்போது அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்தார். இதையடுத்து அவரை போலீசார் பிடித்து சோதனை நடத்தினர். அப்போது அவரிடம் இருந்து போதை மாத்திரைகள், சிரிஞ்சுகள் விற்பனைக்காக வைத்திருந்தது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் நடத்திய விசாரணையில் அவர் கோவை வேடப்பட்டி நம்பி அழகன் தோட்டம் பகுதியை சேர்ந்த விஷ்ணு (வயது 26) என்பது தெரியவந்தது. தொடர்ந்து அவரை கைது செய்த போலீசார் அவரிடம் இருந்து 10 போதை மாத்திரைகள், 10 சிரிஞ்சுகள் உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்தனர். பின்னர் அவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

## லாட்டரி விற்ற 2 பேர் சிக்கினர்

சாய்பாபா காலனி, மே.16-

கோவை ஆர்.எஸ்.புரம் பகுதியில் உள்ள பஸ் நிறுத்தத்தில் சந்தேகத்துக்கு இடமாக 2 பேர் நின்றிருந்தனர். அப்போது அந்த வழியாக ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்த போலீசார் இருவரையும் அழைத்து விசாரித்தனர். விசாரணையில், அவர்களிடம் 3 எண்கள் எழுதப்பட்ட துண்டு சீட்டுகள் சில இருந்தன. இது குறித்து அவர்களிடம் போலீசார் விசாரித்தனர். விசாரணையில் அது மூன்று நம்பர் ஆன்லைன் லாட்டரி என்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் வீரகேரளம் பகுதியில் குறிப்பிட்ட இடத்துக்கு விரைந்து சென்ற ஆர்.எஸ்.புரம் போலீசார் அங்கு மூன்று நம்பர் லாட்டரி சீட்டு எழுதிக்கொடுத்த விசாக் (வயது 25), யமுனா (30) ஆகிய இருவரையும் கைது செய்தனர்.

## வடமாநில தொழிலாளி அடித்துக் கொலை

பொள்ளாச்சி, மே 15: பொள்ளாச்சி அருகே வடமாநிலத் தொழிலாளியை அடித்துக் கொலை செய்த நபரை போலீஸார் தேடி வருகின்றனர்.

கோவைமாவட்டம்,பொள்ளாச்சியை அடுத்துள்ள ரமணமுதலிபுதூர் பிரிவு பகுதியில் முகம் மற்றும் தலையில் ரத்தக் காயங்களுடன் வடமாநில தொழிலாளியின் சடலம் கிடப்பதாக கோட்டூர் போலீஸாருக்கு திங்கள்கிழமை தகவல் கிடைத்தது.

சம்பவ இடத்துக்கு சென்ற போலீஸார் விசாரணை செய்ததில் கொலை செய்யப்பட்டது பிகார் மாநிலத்தை சேர்ந்த சிவ்தாட் மாஞ்சி (31) என்பதும், அதே பகுதியில் தனியார் தொழிற்சாலையில் கடந்த 15 நாள்களாக பணி செய்து வந்த நிலையில், மர்ம நபர்கள் சிவ்தாட் மாஞ்சியை கட்டையால் தாக்கிவிட்டு தப்பியதும் தெரியவந்தது.

இதையடுத்து, போலீஸார் தொழிலாளியின் உடலை கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக கோட்டூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், கொலை நடைபெற்ற இடத்தில் தடயவியல் நிபுணர்கள் தடயங்களை சேகரித்தனர்.

## சூலூரில் கள் விற்பனை: 5 விவசாயிகள் கைது

சூலூர், மே 15: சூலூர் பகுதிகளில் சட்டவிரோதமாக கள் இறக்கி விற்பனை செய்ததாக 5 விவசாயிகளை போலீஸார் திங்கள்கிழமை கைது செய்தனர்.

விழுப்புரத்தில் கள்ளச் சாராய பலி எதிரொலியாக சட்டவிரோதமாக கள் இறக்குபவர்களை பிடிக்க சூலூர் காவல் நிலைய எல்லைக்கு உள்பட்ட பகுதிகளான சூலூர், பாரதிபுரம், முத்துகவுண்டன்புதூர், கலங்கல் உள்ளிட்ட பகுதிகளில் போலீஸார் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது சட்ட விரோதமாக தென்னை மரத்தில் இருந்து கள் இறக்கியதாக 5 விவசாயிகளை போலீஸார் கைது செய்தனர். மேலும், [illegible]

# நொய்யல் ஆற்றங்கரையில் குப்பைக் கிடங்கு: தடை விதிக்க வலியுறுத்தி பொதுமக்கள் மனு

கோவை, மே 15: கருமத்தம்பட்டி நகராட்சியில் நொய்யல் ஆற்றங்கரையோரம் குப்பைக் கிடங்கு அமைக்கும் பணிகளுக்கு தடை விதிக்க வலியுறுத்தி பொதுமக்கள் ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்தனர்.

கோவை ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் கிராந்திகுமார் பாடி தலைமையில் பொதுமக்கள் குறைகேட்புக் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது. இதில் சோமனூர் பகுதி மக்கள் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:

கருமத்தம்பட்டி நகராட்சி ஆத்துப்பாளையம், சாமளாபுரம், சோமனூர் பகுதிகளில் அதிக அளவுவிவசாயம்மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் கருமத்தம்பட்டி நகராட்சி சார்பில்சோமனூர் அருகேநொய்யல் ஆற்றங்கரையோரம் குப்பைக் கிடங்கு அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பகுதியில் விவசாயம் சிறப்பாக நடைபெற்று வரும் நிலையில், குப்பைக் கிடங்கு அமைப்பதால் நிலத்தடி நீர் மாசுபட்டு விவசாயம் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. எனவே, நொய்யல் ஆற்றங்கரையோரம் குப்பைக் கிடங்கு அமைப்பதற்கு தடை விதிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சம்பளத்துடன் கூடிய வார விடுமுறை...**

தமிழ்நாடு அண்ணல் அம்பேத்கர் சுகாதார, துப்புரவு மற்றும் பொதுப் பணியாளர் சங்கத்தினர் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:

மேட்டுப்பாளையம் நகராட்சியில் 100க்கும் மேற்பட்டவர்கள் தினக் கூலி அடிப்படையில் தூய்மைப் பணியாளர்களாக பணியாற்றி வருகின்றனர். தினக் கூலி தூய்மைப் பணியாளர்களுக்கு வாரத்தில் ஒருநாள் சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்க சட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், மேட்டுப்பாளையம் நகராட்சியில் சட்ட விதிமுறைகள் ஏதும் பின்பற்றப்படுவதில்லை. எனவே, தினக் கூலிகளாக பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு சட்ட விதிகள்படி வாரத்தில் ஒருநாள் சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சாலை விரிவாக்கப் பணியை விரைந்து முடிக்க வேண்டும்...**

கோவை குறிச்சிப்பிரிவு வியாபாரிகள் நலச் சங்கத்தினர் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது: கோவை, குறிச்சிப்பிரிவு - போத்தனூர் சாலை அகலப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பகுதியில் கல்லூரி, பள்ளிகள், திருமண மண்டபங்கள், மருத்துவமனைகள், ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடியிருப்புகள் அமைந்துள்ளன. போத்தனூர் ரயில் நிலையம் மற்றும் குடியிருப்புகளுக்கு செல்வதற்கு பிரதான சாலையாக இருந்து வருகிறது. மந்தமாக நடைபெற்று வரும் சாலை விரிவாக்கப் பணியால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர். எனவே, சாலை விரிவாக்கப் பணியை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முதியவர் தர்னா...**

கோவை, எஸ்.எஸ்.குளத்தைச் சேர்ந்தவர் ராஜேந்திரன் (62). இவருக்கு சொந்தமான நிலத்தை தனியார் நிர்வாகம் அபகரித்துக் கொண்டதாகவும், மீட்டுத்தர வலியுறுத்தியும் ஆட்சியர் அலுவலகத்தில் தர்னாவில் ஈடுபட்டார். பின்னர் பாதுகாப்புப் பணியில் இருந்த போலீஸார் முதியவரை மீட்டு ஆட்சியரிடம் மனு அளிக்க அறிவுறுத்தினர். மேலும், பந்தய சாலை அரசு அலுவலர்கள் குடியிருப்பில் சாக்கடை கால்வாய்களை தூர்வார வலியுறுத்தி ஆம் ஆத்மி கட்சியினரும், தி கேரளா ஸ்டோரி திரைப்படத்தை தமிழ்நாடு முழுவதும் திரையிட வலியுறுத்தி ஹிந்துஸ்தான் மக்கள் சேவா இயக்கத்தினரும் மனு அளித்தனர்.



சாலை விரிவாக்கப் பணியை விரைந்து முடிக்க வலியுறுத்தி ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளிக்க வந்த கோவை குறிச்சிப்பிரிவு வியாபாரிகள் நலச் சங்கத்தினர்.

# ரஷிய பல்கலைக்கழகங்களில் மருத்துவப் படிப்பு

## கோவையில் மே 19இல் கண்காட்சி

கோவை, மே 15: ரஷியாவில் உள்ள பல்கலைக்கழகங்களில் எம்.பி.பி.எஸ். பயில கோவையில் மே 19ஆம் தேதி கல்விக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

இது குறித்து கசான் மாநில மருத்துவப் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் தைமூர் ருஸ்தமோவிச் அக்மதேவ் செய்தியாளர்களிடம் திங்கள்கிழமை கூறியதாவது:





பேராசிரியர் தைமூர் ருஸ்தமோவிச் அக்மதேவ்.

ரஷியாவில் உள்ள மருத்துவப் பல்கலைக்கழகங்களில் மாணவர் சேர்க்கைக்கான கல்விக் கண்காட்சி கோவையில் வரும் 19ஆம் தேதி அவிநாசி சாலையில் உள்ள தி கிராண்ட் ரீஜென்ட் ஹோட்டலில் நடைபெறுகிறது. இந்த கண்காட்சியில் ரஷியாவின் முன்னணி மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் பங்கேற்று உடனடி மாணவர் சேர்க்கையை நடத்துகின்றன.

நீட் தேர்வில் வெற்றி பெற்று, 12ஆம் வகுப்பில் முக்கிய பாடங்களில் குறைந்தபட்சம் 50 சதவீத மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள் (எஸ்.சி., எஸ்.டி.யினர், இதர பிற்படுத்தப்பட்டோருக்கு 40 சதவீத மதிப்பெண்கள் போதுமானது) ரஷியாவில் இளநிலை மருத்துவம், பொறியியல் படிப்புகளைப் படிப்பதற்கு விண்ணப்பிக்கலாம். அவர்களுக்கு வேறு எந்த தகுதித் தேர்வும் நடத்தப்படாது. ரஷியாவில் மருத்துவம் பயிலுவதற்கு கல்விக் கட்டணமாக ஆண்டுக்கு சுமார் ரூ.2.80 லட்சம் முதல் ரூ.4.90 லட்சம் வரை செலவாகும். ரஷிய அரசின் வருடாந்திர உதவித்தொகை திட்டத்தின் கீழ் இந்த ஆண்டும் 100 இந்திய மாணவர்கள் 100 சதவீத கல்வி உதவித்தொகை திட்டத்துக்குத் தேர்வு செய்யப்படுவார்கள்.

ரஷியாவில் உள்ள 600க்கும் மேற்பட்ட அரசுப் பல்கலைக்கழகங்களில் 200 நாடுகளைச் சேர்ந்த 3 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். தற்போது 70 பல்கலைக்கழகங்களில் இந்தியாவைச் சேர்ந்த சுமார் 20 ஆயிரம் மாணவர்கள் பயின்று வருகின்றனர். இந்த ஆண்டும் இந்திய மாணவர்களுக்காக சுமார் 5 ஆயிரம் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

# நடைப்பயிற்சி சென்ற பெண்ணிடம் நகைப் பறிக்க முயற்சி

கோவை, மே 15: கோவையில் நடைப்பயிற்சிக்கு சென்ற பெண்ணிடம் நகைப் பறிக்க முயன்ற காரில் வந்த மர்ம நபர்களை போலீஸார் தேடி வருகின்றனர்.

கோவை ஹட்கோ காலனி பகுதியில் வசித்து வருபவர் கௌசல்யா (38). இவரது கணவர் ராஜ்குமார். தனியார் வாகன போக்குவரத்து நிறுவனம் [illegible]



## திருட்டு சம்பவம் எதிரொலி: கோனியம்மன் கோயில் சுற்றுச்சுவரை உயர்த்தி கட்ட வேண்டும்

### இந்து முன்னணி கோரிக்கை

கோவை, மே 15: திருட்டு சம்பவம் நடைபெற்ற கோவை கோனியம்மன் கோயிலின் சுற்றுச்சுவரை உயர்த்தி கட்ட வேண்டும் என்று இந்து முன்னணி அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

கோவை டவுன்ஹால் பகுதியில் உள்ள கோனியம்மன் கோயிலில் அமைந்துள்ள ஆதி கோனியம்மன் எனப்படும் துர்க்கையம்மன் சந்நிதி அருகில் இருந்த உண்டியலை உடைத்து சனிக்கிழமை நள்ளிரவு பணம் திருடப்பட்டுள்ளது. இதுதொடர்பாக உக்கடம் போலீஸார் வழக்குப் [illegible]

## மர்மமான முறையில் சமையலர் சாவு

சூலூர், மே.15: சூலூர் அருகே காங்கேயம்பாளையத்தில் மர்மமான முறையில் டாஸ்மாக் மதுக்கூட சமையலர் உயிரிழந்தது குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கோவை மாவட்டம், காங்கேயம்பாளையத்தில் மரத்தின் கிளையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட ஆண் சடலம் இருப்பதாக போலீஸாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, சம்பவ இடத்துக்கு சென்ற போலீஸார் ஆணின் சடலத்தை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக இஎஸ்ஐ அரசு மருத்துவமனைக்கு அனுப்

4

ANNEXURE - II

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

அனுப்புநர்
திரு.ஆ.முத்துசாமி,
ஆணையாளர்,
கருமத்தம்பட்டி நகராட்சி,
சோமனூர் – 641 668.

பெறுநர்
திரு.R.D.ரகு
த/பெ ராமகிருஷ்ணன்
90சி, ஆத்துக்காடு
சோமனூர் – 641 668

ந.க.எண்.557/2022/சி1 நாள்.25.05.2023

அய்யா,

பொருள்: மக்கள்குறை தீர்க்கும் மனு – கருமத்தம்பட்டி நகராட்சி – நொய்யல் ஆற்றை ஒட்டி குப்பை கிடங்கு அமைவதை தடுக்க கோரியது – விவரம் தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை:
1. முதலமைச்சர் தனிப்பிரிவு மனு எண்.5445964 நாள்.16.05.2023
2. தங்களது மக்கள் குறை தீர்க்கும் மனு எண்.103 நாள்.15.05.2023

*******

கருமத்தம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட சோமனூர் நொய்யல் ஆற்றின் அருகில் குப்பை கிடங்கு அமைவதை தடுக்க கோரி பார்வையில் காணும் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் தங்களது விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதை போல் சோமனூர் நொய்யல் ஆற்றின் அருகில் குப்பைக்கிடங்கு ஏதும் அமைக்கப்படவில்லை உரக்கிடங்குதான் அமைக்கப்படுகிறது. மேலும் உரக்கிடங்கினால் சுற்றுப்புற சூழலுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது


ஆணையாளர்
கருமத்தம்பட்டி நகராட்சி

நகல் பணிந்துசமர்ப்பிக்கப்படுகிறது
மாவட்ட ஆட்சித்தலைவர், கோவை

ANNEXURE - III















GPS Map Camera
Somanur, Tamil Nadu, India
aathukadu Thottam 90/a Somanur, Somanur, Tamil Nadu
641668, India
Lat 11.081356°
Long 77.194673°
30/06/23 08:06 AM GMT +05:30
Google

10

ANNEXURE - IV 11

தமிழ்நாடு அரசு – நீர்வளத்துறை

அனுப்புனர் :
பொறி.மு.சிவக்குமார்,எம்.இ.,
உதவிப்பொறியாளர்,நீ.வ.து,
நொய்யல்(கிழக்கு)பிரிவு,
கோயம்புத்தூர்–641 001.

பெறுனர் :
ஆணையாளர்,
கருமத்தம்பட்டி நகராட்சி,
கருமத்தம்பட்டி,
கோயம்புத்தூர் மாவட்டம்.

கடித எண்.கோ 19 / நொ(கி)/ 2023 நாள். 03.07.2023.

அய்யா,

பொருள் : மனு – கோயம்புத்தூர் மாவட்டம், கருமத்தம்பட்டி நகராட்சி – கருமத்தம்பட்டி கிராமம் – க.ச.எண்.117/2–ல் இத்துறை கட்டுப்பாட்டில் உள்ள நொய்யல் ஆற்றின் கரையின் அருகில் குப்பை கிடங்கு மற்றும் மின் மயானம் அமைத்தல் – ஆட்சேபணை தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை : 1)சோமனூர் ஊர் பொதுமக்கள் சார்பாக திரு.ஆர்.டி.ரகு, த/பெ.ராமகிருஷ்ணன்,90சி, ஆத்துக்காடு, சோமனூர், கோவை – 641 668 அவர்களின் மாண்புமிகு தமிழக முதல்வரின் தனிப்பிரிவு விண்ணப்பம் நாள்.05.05.2023.
2)செயற்பொறியாளர்,நீ.வ.து.,பவானிசாகர் அணைக்கோட்டம், பவானிசாகர் அவர்களின் மே.கு.எண்.வப /இவஅ2./ கோ.8(பி) /338 கோவை /2023 நாள்.08.06.2023.
3)உதவி செயற்பொறியாளர்,நீ.வ.து.,பாசன உபகோட்டம், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் எண்.கோ 58/2023 நாள்.08.06.2023.

**********

பார்வை(1)–ல் காணும் புகார் மனுவின்படி, கோயம்புத்தூர் மாவட்டம், கருமத்தம்பட்டி நகராட்சி, கருமத்தம்பட்டி கிராமம் க.ச.எண்.117/ 2–ல் இத்துறை கட்டுப்பாட்டில் உள்ள நொய்யலாற்றின் கரையில்அருகில் தங்கள் நகராட்சி மூலம் குப்பை கிடங்கு மற்றும் மின் மயானம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்வதாக அறிய வருகிறது. இத்துறையின் முன் அனுமதியின்றி நொய்யலாற்றின் கரையின் அருகில் எவ்வித கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளக்கூடாது. மேலும், குப்பை கிடங்கோ, மின் மயானமோ அமைத்தால், அதனால் வரும் புகை மற்றும் குப்பைகளால் நொய்யல் ஆறு மாசுபடும் நிலை ஏற்படும். மேலும், சுற்றுச்சூழல் வெகுவாக பாதிக்கப்படும். அப்பகுதி பொது மக்களிடமிருந்து ஆட்சேபணை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவுக்கு அளித்துள்ள மனுவின் நகல் இத்துடன் இணைத்தனுப்பப்பட்டுள்ளது.

எனவே, தங்கள் நகராட்சி மூலம் இத்துறை கட்டுப்பாட்டில் உள்ள நொய்யலாற்றின் கரையின் அருகில் அமைக்க உத்தேசித்துள்ள குப்பை கிடங்கு மற்றும் மின் மயான கட்டுமானப் பணிகளை கைவிடுமாறும், எதிர் காலத்தில் இத்துறை அனுமதியின்றி நொய்யலாற்றின் கரையிலோ, இதர நீர் நிலைகளின் அருகிலோ இவ்வாறான கட்டுமானங்களை தவிர்க்குமாறும் கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்– – – – 03.07.2023
உதவிப்பொறியாளர்,நீ.வ.து,
நொய்யல்(கிழக்கு)பிரிவு,
கோயம்புத்தூர்–641 001.

.2.

Scanned with OKEN Scanner

12



நகல் : உதவி செயற்பொறியாளர்,நீ.வ.து., பாசன உபகோட்டம்,கோயம்புத்தூர் அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : திரு.ஆர்.டி.ரகு, 90சி, ஆத்துக்காடு, சோமனூர், கோயம்புத்தூர் அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.

உதவிப்பொறியாளர்,நீ.வ.து,
நொய்யல்(கிழக்கு)பிரிவு,
கோயம்புத்தூர்–641 001.

Scanned with OKEN Scanner

**BEFORE THE HON'BLE NATIONAL GREEN TRIBUNAL**

**SOUTHERN ZONE BENCH AT CHENNAI**

**O.A.No. 69 OF 2023 (SZ)**

**ADDITIONAL TYPED SET**

**Date of Hearing:** 05.07.2023

**M/s. M.N.Balakrishnan**

**(E.No. 12/1992)**

**Mohd Yaqoob Kafeel**

**(E.No. 4512/2018)**

**COUNSEL FOR APPLICANT**

**9942359090**